**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 03/2009**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா.27**
**Defence**
**Court**

**Name : கண்ணன்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **11.01.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசி சம்பாதெருவில் குடியிருக்கிறேன். குருநாதர் வைத்தியசாலை வளைவுக்கு கீழ்பக்கம் நான் லெட்சுமிநிவாஸ் என்ற பெயரில் ேஹாட்டல் நடத்தி வருகிறேன். என் கடைக்கு அருகில் சங்கரசுப்பிரமணியன் என்பவர் கிழக்கே பெட்டிக்கடை நடத்தி வருகிறார். அதற்கும் கிழக்கே காளையப்பன் டீக்கடை நடத்தி வருகிறார். அப்துல்சமூது

என்பவர் ை ஹடெக் என்ற பெயரில் செல்போன் கடை நடத்தி வந்தார். மலையான் தெருவை சேர்ந்த ரவி என்பவர் சங்கரசுப்பிரமணி கடைக்கு பக்கத்தில் இருந்த கட்டிடத்தை வாடகைக்கு எடுத்து வைத்திருந்தார். 2007 ம் வருடம் ஒரு கலவரம் நடைபெற்றது அதைபற்றி கேள்விப்பட்டேன். நேரில் தெரியாது. அதற்கு முன்பு எங்கள் கடைப்பக்கம் ஏதேனும் அசம்பாவிதமான சம்பவம் நடைபெற்றதா என்றால் இல்லை. சம்பவத்திற்கு முன்பாக தென்காசியில் மலையான் தெருவில் ஐந்து கசாப்புகடை அருகே இருதரப்பினரும் மோதிக்கொண்டதாக தெரியும் யார் யார் மோதிக்கொண்டார்கள் என்று தெரியாது. ஆனால் இறந்துபோனார்கள் என்று தெரியும். அந்த சம்பவ த்திற்கு 2 அல்லது 3 நாட்களுக்கு முன்னர் எங்கள் கடையின் அருகில் உள்ள இந்து முன்னனி அலுவலகத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அங்கு யார் வந்தார்கள். என்ன பேசினார்கள் என்று தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. சக்தி என்பவரை மட்டும் தெரியும். அவர் இந்து கட்சியை சேர்ந்தவர் என்பதால் தெரியும் , வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை 2007 ம் வருடம் அக்டோபர் மாதம் போலீசார் விசாரித்தனர் என்றும் அப்போது நான் லெட்சுமி நிவாஸ் என்ற பெயரில் ே ஹாட்டல் நடத்துவதாகவும் என் கடைக்கு கிழக்கில் உள்ள அப்துல்சமூது என்பவரின் செல்போன் கடைக்கும் காளையப்பன் கடைக்கும் இடையே இந்து முன்னணி அமைப்பை சேர்ந்த ரவி என்பவர் ராஜ் என்ற பெயரில் கேபிள் டீவி நடத்தியதாகவும் அவர் அலுவலகத்தில் இந்து முன்னணி அலுவலகம்

செயல்பட்டதாகவும் சுமார் 21/2 மாதங்களுக்கு முன்னர் வாடகைக்கு எடுத்து அவர் பொறுப்பில் வைத்திருந்தார் என்று கூறினேன் என்றால் சரியல்ல. ஆனால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார் என்றும் தற்போது வழககிற்காக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 14.08.2007 ம் தேதி கூலக்கடை பஜாரில் 6 நபர்கள் இறந்தார்கள் என்றும் அதை கேள்விப்பட்டேன். ராஜ் கேபிள் டிவி அலுவலகத்தில் சம்பவத்திற்கு 3 தினங்களுக்கு முன்னர் சொர்ணத்தேவரின் மக்கள் மற்றும் அவரது உறவினர் அங்கு வந்துசென்றனர் என்றும் அவர்கள் பெயர் சக்தி, செந்தில், சுரேஷ், சேகர், சுரேந்திரன், சுப்பிரமணி, கபிலன் என்று எனக்கு தெரிந்தவர்கள் என்றும் திங்கட்கிழமை மதியம் 2 ½ மணியளவில் 3 பேர் பேசிக்கொண்டிருந்தனர் என்றும் அவர்கள் பேசிக்கொண்டதில் இருந்து குட்டி மணி என்பவர் அலெக்சை பார்த்து நான் தான் தூத்துக்குடி போய் பாம் வாங்கனும்னு செந்தில் என்ன சொல்கிறார் என்று பார்க்கலாம் என்றும் நாளைக்கு ஹனிபாவுடன் வர்ரபயலுகள போட்டு தள்ளவேண்டும் என்றும் அலெக்ஸ் என்பவர் எனக்கு சம்பவத்தை முடித்ததும் அங்கிருந்து செல்வதற்கு செந்தில் என்வரிடம் இருசக்கரவாகனம் கேட்டிருப்பதாகவும் சுரேந்திரன் அங்கு வந்து எங்கள் இருவரையும் எச்சரித்து அனுப்பி வைத்தார் என்றும் மறுநாளும் அதே நபர்கள் அங்கு வந்துசெல்வதுமாக இருந்தார்கள் என்றும் ஒவ்வொருத்தரும் வெளியே போகும்போது அருவாளை பின் சட்டை காலரில் சொறுகி வைத்துக்கொண்டு வந்தார்கள் என்றும் இதை நான் போலீசாரிடம் கூறினேன் என்றும் சொன்னால் சரியல்ல. 14.08.2007 சம்பவம் நடைபெற்றது பற்றிதான் கேள்விப்பட்டேன். சம்பவத்திற்கு

1 மணிநேரத்திற்கு முன்பாக சக்தி ஒரு காரில் சுப்பிரமணி, செந்தில் , சுரேந்திரன், கபிலன் ஆகியோர்களை ஏற்றிக்கொண்டு கேபிள்டிவி அலுவகத்தில் இருந்து வடக்குநோக்கி சென்றார்கள் என்றும் அதன் பின்னர் சொர்ணத்தேவர் மகன்கள் மூன்றுநபர்களும், 3 முஸ்லீம்களும் இறந்துபோனதாக கேள்விப்பட்டேன் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வேறு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளில் பலரும் எனது வாடிக்கையாளர்கள் என்றும் அவர்களில் சிலர் என் உறவினர் என்றும் அதனால் அவர்களை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சிம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**